காவல் கண்காணிப்பாளர், தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, சென்னை அவர்களது

செயல்முறை ஆணை

முன்னிலை : திரு. ப. சரவணன், இ.கா.ப.,

ந.க.எண்.பபி2(1)/ த.பி / 10191/2018 நாள்: 22.09.2020

மா.ஆ.எண். த.பி / 769/2020

சிறிய தலைப்பு : காவல்துறை – தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை – கணினி விவரப்பதிவாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராக பணி நியமனம் பெற்று பணிபுரிந்து வரும்– திரு.G.சுந்தர், இ.நி.உ., த.பி.கு.பு.துறை, சென்னை என்பவரது பணியினை வரன்முறைப்படுத்தி ஆணையிடுவது – தொடர்பாக.

பார்வை : 1) அரசாணை(நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ–1) துறை, நாள் 02.03.2016.

2) தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.20784/சி.ஏ.1/ 2010, நாள் 12.11.2010

3) காவல் கண்காணிப்பாளர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் ஆணை எண். 50/2011, ந.க.எண். அ4/30705/2010, நாள். 11.01.2011 .

4) தலைமையலுவலக கணினி விவரப்பதிவாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர் நியமனம் ஆணை ந.க.எண். 84761/NGB.2(2)/ 2018, நாள் 02.08.2018.

5) இவ்வலுவலக ஆணை எண். 849/2018, இதே எண். நாள். 16.08.2018

6) தலைமையலுவலக சுற்றுக்குறிப்பாணை ந.க.எண். 041769/சி.ஏ.ஆர். 1/2016, நாள். 21.12.2017

-----

ஆணை:-

மறைந்த குதிரை பராமரிப்பாளர், K.கணேசன், சென்னை பெருநகர காவல் அவர்களின் மகன் திரு.G.சுந்தர் என்பவருக்கு பார்வை 2 மற்றும் 3 காணும் ஆணைகளின் படி கருணை அடிப்படையில் கணினிவிவர பதிவாளர் பதவி தரத்தில் பணிநியமனம் பெற்று 01.11.2011மு.ப முதல் திருவள்ளூர் மாவட்டதில் பணிபுரிந்து வந்தார். அரசாணை(நிலை) எண்.220, உள் (காவல் 15) துறை, நாள். 18.02.2016 ன் படி மேற்கண்ட தனியருக்கு கணினி விவரப்பதிவாளர் பதவியில் 02.02.2013 பி.ப திருவள்ளூர் மாவட்ட ஆணை எண். 390/19, ந.க.எண். A1/5011/2016, நாள். 28.07.2016 தகுதி காண் பருவம் முடிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை 4 மற்றும் 5 ல் காணும் ஆணைகளின் படி மேற்கண்ட தனியரின் பெயர் 2018 – 2019 (2017 – 2018 சேர்த்து) கணினி விவரப்பதிவாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளர் பணிநியமனம் முது நிலை பட்டியலில் சேர்க்கப்பட்டு இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெற்று தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, சென்னை அலுவலகத்தில் 31.08.2018 பி.ப முதல் அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்.

3. பார்வை 6 ல் காணும் தலைமையலுவலக சுற்றுக்குறிப்பாணை அறிவுரை கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகளில் பகுதி 3 ல் உள்ள ஒழுங்கு முறை 16 c ஒரு சார்நிலைப்பணியிலிருந்து மற்றொரு சார்நிலை பணிக்கு பணி நியமனம் செய்ய தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெற தேவையில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நேர்வில் குறிப்பிடப்படும் கணினி விவரப்பதிவாளர் பதவி தமிழ்நாடு பொது சார்நிலைப்பணிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுளளதாலும், மேலும், கணினி விவரப்பதிவாளர் பதவியிலிருந்து பணி மாறுதல் முறையில் பணி நியமனம் செய்யப்படும் இளநிலை உதவியாளர் / தட்டசர் பதவி தமிழ்நாடு அமைச்சுப்பணிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதாலும், இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள ஊதிய விகிதத்தினை கருத்தில் கொள்ளம் போது தமிழ்நாடு அமைச்சுப்பணியில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவி சார்நிலைப்பணிகளின் கீழ் வரும் பணியாக கருதப்படுகிறது. எனவே, கணினி விவரப்பதிவாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் முறையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவிக்கு பணிநியமனத்துடன் கூடிய பணிவரன்முறைக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் இசைவினை பெறத் தேவையில்லை என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. மேலும், அரசாணை(நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ–1) துறை, நாள் 02.03.2016 வழங்கப்பட்டுள்ள அறிவுரையின்படி 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணியினை நியமன அதிகாரியே பணியினை வரன்முறைபடுத்தி உரிய செயல்முறை ஆணை வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5. எனவே, மேற்படி அரசு ஆணை மற்றும் தலைமை அலுவலக சுற்றுக் குறிப்பாணையில் கண்டுள்ள அறிவுரைப்படி திரு. G. சுந்தர், இளநிலை உதவியாளர், தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை, சென்னை என்பவரது தற்காலிக பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணிக்கு அறிக்கை செய்த நாளான 31.08.2018 பி.ப லிருந்து இளநிலை உதவியாளர் பதவி தரத்தில் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

ஓம்/– ப. சரவணன்,
காவல் கண்காணிப்பாளர்,
தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை,
சென்னை–4.

பெறுநர்

திரு. G. சுந்தர், இளநிலை உதவியாளர்,
தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, சென்னை.
– நிர்வாக அதிகாரி(நிர்வாகம்), த.பி.கு.பு.துறை, சென்னை மூலமாக.

நகல்:

1. காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை–4.
2. காவல் இணை ஆணையாளர், தெற்கு மண்டலம், சென்னை பெருநகர காவல், சென்னை–16
3. மாவட்ட ஆணை புத்தகம்.

// உ.ந.உ.ப.அ //